S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2202 கார்த்திகை 05 வியாழக்கிழமை [21-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 352

# 2 தாக்குதல்களில் 31 படையினர் பலி!

## பள்ளிக்குடா, பொலன்னறுவை இரு இடங்களிலும் புலிகள் அதிரடி

கொழும்பு, நவம்பர் 21

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய இரு வெவ்வேறு அதிரடித் தாக்குதல்களில் ஸ்ரீலங்காப் படையினர் 31 பேர் உயிரிழந்தனர்.

மன்னார் மாவட்டம் பள்ளிக்குடாவில் பத்துப் படையினரும், பொலன்னறுவை மாவட்டம் சிங்கபுரவில் ஒரு சாரதி உட்பட 21 படையினரும் பலியாகினர்.

இத்தாக்குதல்களில் எண்ணிக்கை குறிப்பிடப்படாத அளவு படையினர் காயமடைந்தனர்.

பொலன்னறுவை சிங்கபுரவில் நிலக்கண்ணிகளை அகற்றிக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ... இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் பெரும் அளவில் ... மன்னார் மாவட்டம் பள்ளிக்குடா இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய படையினர் மீது நடத்தப்பட்டது ...

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 21

பள்ளிக்குடாப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர். ...

★ ரி - 56 ரகத் துப்பாக்கி ... ★ 203 ரக ... ★ 7.62 ... [உ-5]

## உண்மைகளைத் திரித்து அரசு பிரசாரப் போர் நடத்துகிறது

### வானொலிச் செய்தியுக்கு பிரபா செய்தி

யாழ்ப்பாணம், நவ. 21 ... எமது போராட்டத்துக்கு எதிராக ... அரசு ... பிரசாரப் போரை நடத்தி வருகிறது ...

[3 ஆம் பக்கம் பார்க்க]

## படை வெளியேறும் வரை கடமைக்கு திரும்புவதில்லை

### திவக அரச ஊழியர் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 21 ... திவகப் பகுதி ... அரச ஊழியர் ... முடிவு செய்துள்ளனர். ... தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ...

[3 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



காங்கேசனில் சாமான் வரும்... கைக்கு எட்டியது வாய்க்கு எட்டுமோ....?

## 4 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 21

பள்ளிக்குடாவில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

ரமேஸ் [ஏ... — ...], ... [பரா. இவராஜ் — பொத்துவில்], ... [சி. சர்... — ...], சாந்தன் [சதீதலிங்கம் — ... தீவு] ஆகியோரே வீரமரணமடைந்தனர். (உ-5)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 21

பலாலி, ... இராணுவ முகாம்களில் இருந்து சுற்றுப்புறக் குடியிருப்புக்களை நோக்கி நேற்று ... 6 மணியளவில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ... [உ-18]

## பலாலியில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், நவ. 21 ... [உ-8]

## தபால் பொதிகள் பருத்தித்துறையில்!

யாழ்ப்பாணம், நவ. 21 ... கப்பலில் ... தபால் பொதிகள் ...

[3 ஆம் பக்கம் பார்க்க]

# முதல் உணவு கப்பல் காங்கேசன் வந்தது!

## பொருள்களை இறக்கும் வேலை நேற்றைய தினமே ஆரம்பமானது

யாழ்ப்பாணம், நவம்பர் 21

யாழ். மாவட்டத்திற்கான உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு முதல் தடவையாக இரண்டு கப்பல்கள் காங்கேசன் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன.

அந்தக் கப்பல்களில் ஒன்றிலிருந்து உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பிக்கப்பட்டன.

இறக்கப்படும் பொருள்கள் காங்கேசன் துறையிலிருக்கும் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்படுகிறது. ... ஆயிரம் தொன் வரையான பொருள்களை ஏற்றிவரக் கூடிய "பாரோன்" ... கொழும்பிலிருந்து புறப்பட்டு 16 ஆம் திகதி காங்கேசன் துறைமுகத்தை வந்தடைந்தது. ...

[3 ஆம் பக்கம் பார்க்க]

## உணவுப் பொருள்களை ஏற்றிவர செஞ்சிலுவை கண்காணிப்புடன் வாகன அணி காங்கேசன் செல்லும்

யாழ்ப்பாணம், நவ. 21 ...

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தேசிய கொடி ஏற்றுவதுடன் மாவீரர் வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 21 ... மாவீரர் வாரம் ...

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வரலாறு படைத்த மாவீரரை நாம் நினைவு கூர்வோம்!

### மாத்தயா செய்தி

யாழ்ப்பாணம், நவ. 21 ... மாவீரர்களை ... நினைவு கூர வேண்டும் ... தமிழீழ விடுதலைப் புலிகள் ... 

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### அச்சக இயந்திரங்கள் விற்பனை

Krause ஆங்கில பேப்பர் கட்டர், Otley ஆங்கில சிலிண்டர் மெஷின் (டபிள் கிறவுண் அளவு) விற்பனைக்குண்டு. இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/1002)

### தேவை

இளைப்பாறிய வங்கி முகாமையாளர் குடும்பத்தினருக்கு சமையலுக்குப் பெண் தேவை. பங்களாவில் தங்கலாம் அல்லது தினமும் வீட்டிலிருந்து போய் வரலாம். தகுந்த சம்பளமும் சகல வசதிகளும் அளிக்கப்படும். வி. என். சந்தசாமி, 87, புகையிரத வீதி, கொக்குவில். (18840)

### இலவச திருமண சேவை

34 வயதுடைய லண்டன் உயர்தர (Advanced) டிப்ளோமா கம்பியூட்டர் விரிவுரையாளர், 30 வயதுடைய B. Sc: ஆசிரியை பெண்களுக்கு வரன்கள் தேவை. குறிப்பு: விவரங்களை இருமுத்திரைக் கவர்களுடன் அனுப்பவும். ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, 958/8, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (4398)

### "நிம் தூபம்"

மழை காலத்துடன் படையெடுத்துள்ள நுளம்புக் கூட்டம் விரண்டு ஓட, நிம் தூபம் தினமும் புகையுங்கள் "நீம்" ஓர் வேம்பு தயாரிப்பு. மிலக்வைத். (சி/0912)

### மணமகள் தேவை

யாழ். இந்து உடையச் செல்வர் உள்ள 27 வயது கனடா பிரஜை குறைவருக்குப் பெண் தேவை. நட்சத்திரம்: பூராடம் பாவம் 55/16, ABCDE, 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (18826)

யாழ். இந்து 35 வயது U.K யில் P. H. D. படித்துக் கொண்டிருக்கும் மணமகனுக்கு பெண் தேவை. நட்சத்திரம்: பூசம், இரகபாவம் 10/16 ABCDE 828, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (18825)

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும். தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூரோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (இ-0798)

### திருமண சேவை

பல தொழில்களிலும் எம்மிடம் மணமக்கள் உள்ளனர். ஜாதகங்களுடன், புகைப்படங்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: சுவாமி வசர் இராஜகுலசிங்கம், விநாயக திருமண சேவை, 53/5, அன்னசத்திர ஒழுங்கை, சந்நிதிமடம். (18846)

## மாவீரர் தின விழா

இடம் : புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

காலம்: 22-11-1991 வெள்ளி மாலை 3 00 மணி

மாவீரர் அஞ்சலி, சிறப்புச் சொற்பொழிவு, பட்டிமன்றம் என்பவற்றுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகி

(சி/1005)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை நெல்லியடி, கரவெட்டி

## கேள்வி அறிவித்தல் — 1992

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், பைசிக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 1992 ஆம் ஆண்டு தை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 1992 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனவு செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 06-12-91ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் நெல்லியடியிலுள்ள தலைமை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் அந்தந்த உபஅலுவலக பொறுப்பதிகாரியால் 03-12-91ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

மேலும் கேள்விகள் தொடர்பாக மேலதிக நிபந்தனைகள் அடங்கிய விபரங்களை உப அலுவலகங்களில் அறிந்து கொள்ளலாம்.

[C/0917]

இ. ஐயாத்துரை
விசேட ஆணையாளர்

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 28 - 06 - 1922
உதிர்வு: 21 - 11 - 1990

### திருமதி கிறிஸ்தோப்பர் மேரியோசப்பின்
(சின்னத்தங்கச்சி)

எங்கள் இல்லத்தின் இணையில்லாத் தலைவிக்கு விளக்கி, மகளையும் சுற்றமும் பேணிக்காத்து பாசமுடன் எம்மையெல்லாம் அரவணைத்து, புவி மீது வாழும் வழி அமைத்து, அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து, தோன்றாத் துணையாக எம் நினைவுகளில் என்றென்றும் வாழும், எங்கள் பாசத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காக யாழ்ப்பாணம் ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரி சிஸ்ரர் ஒடில், உறவினர்கள்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [18832]

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 - 08 - 1930

உதிர்வு: 12 - 12 - 1990

திதி: 21-11-1991

### ஆறுமுகசாமி செகராசசிங்கம்
(முன்னாள் பிராந்திய முகாமையாளர், நீர்விநியோக வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்)

எங்கள் ஒளி விளக்காய் வாழ்ந்து அன்று திருக்கார்த்திகை புண்ணிய தினத்தில் சோதியுடன் மறைந்து விட்டாய். உன் நினைவு எங்கள் நெஞ்சில் எப்பொழுதும் நிலைகொண்டிருக்கும்

உமது ஆத்ம சாந்தியை நாடும்!
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், குடும்பத்தினர்.

4, ஓடை (ராதா) ஒழுங்கை,
வண்ணார்பண்ணை [18833]

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு: |
|---|---|
| 18 | 04 |
| 11 | 12 |
| 1936 | 1987 |

### அமரர் இ பஞ்சாட்சரம்
(அருள் முருகன் நகை மாளிகை, யாழ்ப்பாணம்)

எங்கள் குடும்ப ஒளி விளக்கே! ஆருயிர்த் தெய்வமே! அன்புத் தந்தையே! ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும் தங்கள் ஆத்ம சக்தி எங்களை என்றென்றும் வழி நடத்தும் தங்கள் ஆத்ம சாந்தியடைய என்றும் இறைவன் திருவடிகளை இறைஞ்சுகிறோம்.

மனைவி, மக்கள்,
மருமகன், பேர்த்தி

சத்ருளி,
சாவகச்சேரி. (18850)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஆறுமுகம் சண்முகநாதன்
(முன்னாள் இலங்கை திறைசேரி நொப்பரி)

தோற்றம்: 17-05-1923
மறைவு: 12-12-1989

திதி: 21-11-1991

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் தங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது.

அன்பு மறவாத:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மயிலிட்டி சேனை நார் [4599]

## 3 ஆம் மாத நினைவஞ்சலி



### திருமதி பஞ்சாட்சரம் கமலாம்பாள்
(இவரது கணவர் - கொழும்பு சுங்கமான் ஆஸ்பத்திரியின் கடமையாற்றியவர்)

அமெரிக்காவில் மறைவு: 21 — 08 — 1991

ஆண்டு பிரசோற்பத்தி ஆவணி மூன்றாம் திகதி பூண்ட பிரதோசம் சேர் பூர்வபக்கம் - மாண்புமிகு சற்புத்திரர்களை ஈன்ற சுவாதியில் நற்பதம் அடைந்தாள் நமதே.

அன்னையின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்:-

| | |
|---|---|
| Dr ஞானேஸ்வரன் குடும்பம் | — அமெரிக்கா |
| யோகேஸ்வரன் குடும்பம் (பொறியியலாளர்) | — கனடா |
| விக்னேஸ்வரன் குடும்பம் ( " ) | — இங்கிலாந்து |
| அகிலேஸ்வரன் குடும்பம் | — அமெரிக்கா |
| மகேஸ்வரன் | — அமெரிக்கா |
| காலஞ் சென்ற இராமேஸ்வரன் | — |
| தணிகாசலம் ரங்கநாயகி குடும்பம் | — ஜேர்மனி |

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். [18841]

## முதலாம் வருட நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 | 21 |
| 09 | 11 |
| 1921 | 1990 |

### திருமதி
### செபஸ்தியம்மா யோகரட்டினம் சந்தியாப்பிள்ளை

ஆண்டொன்று கடந்தாலும் எம்மம்மாவின் அன்புமுகம் நெஞ்சைவிட்டு அகலவில்லை கண்டிருந்த இருந்திருந்தால் வேண்டும் நாங்கள் இடரின்றி இன்பமதாய் வாழவைத்த ஆண்டவனை மன்றாடும் செபஸ்தியம்மா யோகரட்ணம் சந்தியாப்பிள்ளை தாயே! வேண்டுகிறோம் உனதுபாதம் நீக்கமோட்ச விண்ணுலகைச் சேர இறை ஆசீர்தன்னை.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

466/2B, ஆர்ச் புஷ்பவியாபர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [18836]

யாழ்ப்பாணம்
பல்கலைக் கழகம்,
இலங்கை.

மருத்துவ பீடம்
மூன்றாவது வருட
மருத்துவப் பயிற்சி
நெறி ஆரம்பம்
(1988 பிரிவு)

மூன்றாவது வருட மருத்துவப் பயிற்சி நெறி [1988 பிரிவு] 1992 ஜனவரி 6ஆம் திகதி ஆரம்பமாகும்.

— பதிவாளர்.

[சி 0915]

உயர் கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி.

G. A. Q.
ENGLISH
LITERATURE
ஆரம்பமாகி விட்டது.

இலங்கை விவகாரகல்வி, சூழல் கல்வி

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

பிரபல விரிவுரையாளர்களால் நடத்தப்படுகின்றன.

[சி-1004]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதவன்

### மாவீரர் வாரம்

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாவீரர் நாளை முன்னிட்டு இன்று தொடக்கம் தமிழ்ப் பகுதிகள் எங்கும் மாவீரர் வாரம் ஆரம்பமாகிறது. இந்த வாரம் முழுவதிலும், மாவீரர்களின் நினைவாக கிராம, நகர, பிரிவு மட்டங்களில் அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

மண்ணுக்காக - அதனை மீட்பதற்காக, மக்களுக்காக - அவர்களின் சுதந்திரத்துக்காக, சுபீட்சத்துக்காக தம்மை அர்ப்பணித்தவர்களை மாவீரர்களாகவும், தேசிய வீரர்களாகவும் போற்றி, அஞ்சலி செலுத்துவது வழமையானதே.

தமிழீழம் இன்னும் முழுவதுமாக மீட்கப்படவில்லை. மக்களுக்குச் சுதந்திரமும் கிடைக்கவில்லை. அவற்றுக்கான போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. எனினும் அந்த இலட்சியங்களை அடைவதற்காகத் தமது இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களை மக்கள் போற்றி அஞ்சலி செலுத்த முன்வந்திருக்கிறார்கள்.

மண் மீட்கப்பட வேண்டும் என்பதிலும், தங்களுக்கு அரசியல், சமூக, பொருளாதார சுதந்திரங்கள் கிடைக்க வேண்டும் என்பதிலும், தமிழ் மக்கள் எவ்வளவு ஆர்வமும், அக்கறையும் உள்ளவர்களாக விளங்குகிறார்கள் என்பதை மாவீரர் வாரம், ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும், வெளியுலகத்துக்கும் உணர்த்தும் என நம்பலாம்.

மக்கள் மனங்களில் கொழுந்துவிட்டெரியும் சுதந்திர உணர்வுக்கு முன்னால் மரணமும், ஏனைய கஷ்டங்களும் பொருட்டாகத் தெரியவில்லை. அந்த உணர்வு ஒன்று திரண்டு, செயற்பட்டு பூகம்பமாக வெடிக்கும்போது எந்தப் பேரரசும், வல்லரசும் ஈடுகொடுக்க முடியாது; தாக்குப்பிடிக்க இயலாது; எதிர்கொள்வது கடினம்.

தமிழ் மக்கள் ஒரு காலத்தில் தங்களைத் தாங்களே ஆண்டவர்கள். ஆனால் இடைக் காலத்தில் அந்நிய ஆதிக்கத்துக்கு உள்ளாக நேர்ந்தது. எனவே ஆண்ட பரம்பரை மீண்டும் தன்னைத் தானே ஆள விரும்புவது இயற்கையானது.

அதனால் தான், தமிழர்களின் சுதந்திர உணர்வு போராட்ட உணர்வாகப் பரிணமித்துள்ளது. சுதந்திர உணர்வும், போராட்ட உணர்வும் சங்கமிக்கும்போது, தியாகமும், அர்ப்பணிப்பும் தமாகவே மக்களிடம் முகிழ்க்கின்றன.

அத்தகைய ஒரு முகிழ்ப்பின் பிரதிபலிப்பே தமிழ் இளைஞர்களின் வீரமும் அர்ப்பணமும், தியாகமும். எனில் மிகையாகாது. தமது நலனுக்காகவோ சுகவாழ்வுக்காகவோ அன்றி எதிர்கால தமிழ்ச் சந்ததியினரின் நலனுக்காக தங்களை ஈந்தவர்கள் சாதாரண வீரர்கள் அல்லர்; மாவீரர்கள்.

எதிர்காலச் சந்ததியின் விடிவுக்கு வழி சமைக்க வேண்டும் என்ற இலட்சியத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து, அதனை நாடியே உழைத்தவர்கள்; இன்றைய நாளைய தமிழ்ச் சந்ததியினர் எல்லோராலும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்; அஞ்சலி செலுத்தப்பட வேண்டியவர்கள்.

அந்த வகையில் மாவீரர் வாரத்தையும், நாளையும் சிறப்பாகக் கொண்டாடி மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் மடிந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த மக்கள் அணி திரள்வது சிறப்பான எதிர்காலத்துக்குக் காட்டி ஒளி ஏற்றுவதாகும்.

## வயிற்றோட்டத்தினால் மற்றொரு சிசு பலி!

யாழ்ப்பாணம், நவ. 21

அதி முகாம் ஒன்றில் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்ட மற்றொரு குழந்தை யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று மாலை மரணமானது.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி அகதி முகாமில் தங்கியிருந்த வேலணையைச் சேர்ந்த குமார் வசீகரன் என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே நேற்று மரணமானது. [உ-191]

### உண்மை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேவை முக்கியமாகிறது.

—புலிகளின் குரல் ஓராண்டு பூர்த்தி விழாவைக் கொண்டி விடுத்த ஆசிச் செய்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் நேற்று யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் இந்த ஆசிச் செய்தியை வாசித்தார்.

திரு. பிரபாகரனின் ஆசிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரு யுத்த சூழலில் எத்தனையோ நெருக்கடிகள் மத்தியில், போராட்டத்தின் எழுச்சிக் குரலை தினமும் மக்களுக்கு காலம் தவறாது ஒலிபரப்புச் சேவையை நடத்திவருவது ஒரு சாதாரண சாதனை அல்ல.

ஒரு விடுதலைப் போராட்டத்தை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் வகிக்கும் பங்கு எத்தனை முக்கியம் வாய்ந்தது என்பதையை நான் விளக்கிக் கூறத் தேவையில்லை.

போராட்டத்தின் எதார்த்த நிலையை, புறநிலை உண்மைகளை, மக்களுக்கு எடுத்துக் கூறுவதுடன் மக்களிடையே தேசிய விழிப்புணர்வையும் விடுதலை உணர்வையும் ஊட்டி வளர்த்து மக்களின் அரசியல் அறிவைக் கட்டி வளர்ப்பதில் மக்கள் தொடர்பு சாதனங்கள் அரிய சேவை ஆற்ற முடியும். இந்த வழியில் எமது பத்திரிகைகளும், எமது வானொலியும் மக்களின் விடுதலைக்கு பணியாற்றுவது அவசியம்.

எதிரியின் பொய்மையான பிரசாரப்போருக்கு எதிராக, உண்மையின் ஆயுதமாக எமது வானொலியின் குரல் ஒலிக்க வேண்டும். ஒரு சத்திய யுத்தத்தின் போர் முரசமாக 'புலிகளின் குரல்' ஒலிக்க வேண்டும்.

இப்படி அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### படை வெளி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேறும் என்றும் அரசாங்கம் அறிவித்திருந்தது.

அதனைத் தொடர்ந்தே நேற்று தீவகப் பகுதி இடம்பெயர்ந்த, பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கம் ஒன்று யாழ்ப்பாணம் செய்யப்பட்டது. தீவகப் பகுதியின் பல்வேறு கிராமங்களையும் சேர்ந்தவர்கள் இதில் அங்கத்தவர்களாவார்கள்.

தீவகப் பகுதியில் இராணுவத்தினரிடம் சிக்கியுள்ள உறவினர்களை மீட்டுக் கூட்டி வருவதற்கு செஞ்சிலுவைச் சங்கக் குழுவுடன் தொடர்பு கொள்வது என்ற தீர்மானமும் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. மற்றும் பல முடிவுகளும் செய்யப்பட்டன! (அ-167)

## 'புலிகளின் குரல்' வானொலி ஓராண்டு நிறைவு நேற்று

'புலிகளின் குரல்' வானொலியின் முதலாவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள் நேற்று மாலை யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றன.

விழாவில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி, இறுவர்களின் 'தவில்' நிகழ்ச்சி, நாடகம் மற்றும் இசை நிகழ்ச்சி என்பன நடைபெற்றன.

புலிகளின் குரல் ஓராண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு கோ. மகேந்திரராஜா (மாத்தயா) வழங்கினார்.

தலைவர் பிரபாகரனின் ஆசிச் செய்தியை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விழாவில் வாசித்தார்.

விழாவில் விடுதலைப் புலிகளின் முன்னணிப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். (உ-6)

### முதல் உணவு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் வந்த சேர்ந்த "பாரேஸ்" கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் வேலை நேற்றே ஆரம்பிக்கப்பட்டது.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலையில் ஈடுபடுத்துவதற்காக வழியர்களும் மற்றும் கப்பல் தொழில் நுட்பவியலாளர்களும் கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலிக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

கப்பல் கடந்த 16 ஆம் திகதியே இறக்குதுறையுடன் அணைக்கப்பட்ட போதிலும், தொழிலாளர்கள் வந்து சேரத் தாமதமாகியதால் பொருள்களை இறக்கும் வேலை நேற்றே ஆரம்பமானது.

"பாரேஸ்" கப்பலில் 200 தொன் அரிசி, 350 தொன் மா, ஐம்பது தொன் சீனி, 19 தொன் பருப்பு ஆகியன எடுத்து வரப்பட்டுள்ளன.

கப்பலில் இருந்த பொருள்கள், இறங்குதுறையில் தரித்து நிற்கும் லொறிகளுக்கு நேரடியாக இறக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முதல் கட்டமாக பத்துத் தொன் பொருள்கள் இறக்கப்பட்டதாகத் தெரிய வந்தது.

பொருள்களை இறக்கும் வேலை இன்றும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கேசன் துறைமுகப் பகுதி ஸ்ரீலங்கா கடற்படையினரின் பொறுப்பில் இருப்பதாகவும்—

இறக்கும் வேலைகள் அவர்களது கண்காணிப்பில் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-6-8)

### தேசிய---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரை என்பன அமையும்.

இன்று காலை 8.00 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடி ஏற்றும் வைபவத்துடன் மாவீரர் வார நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

பாடசாலைகள், கல்லூரிகள், உயர்கல்வி நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், நிர்வாகச் செயலகங்கள், தனியார் நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள் யாவும் இந்த மாவீரர் வாரத்தை இன்று முதல் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றன.

அத்துடன் விடுதலைப் புலிகளின் பாசறைகள், இக்கச் செயலகங்கள், மாவீரர் முன்னணி, பலப்பிரிவுச் செயலகங்கள் ஆகியவற்றிலும் காலை எட்டு மணிக்குத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு காலை மணி 8.05 இற்கு சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்ச்சியும் ... நடைபெறும். (உ)

### வரலாறு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் இதுவரை 3 750 புலி வீரர்கள் வீரமரணமடைந்து விட்டனர். ஒர் இனத்தை இலட்சியத்திற்காக, எமது மக்களின் எதிர்கால சுபீட்சத்துக்காக தமது உயிர்களை ஈந்த இந்த மாவீரர்களை எம் நெஞ்சங்களுள் நிறுத்து முகமாக பிரகடனப்படுத்தப்பட்ட மாவீரர் வாரத்தில் தொடக்க நாள் இன்றாகும்.

இன்றிலிருந்து தொடங்கும் இவ்வாரம், மாவீரர்களின் போராட்ட வாழ்வை, அவர்களது உணர்வுகளை எமது மக்கள் அனைவரும் மீண்டும் பார்க்கும் விதத்தில் அமைந்திருக்கும். இதன் காரணமாக எம்மால் விடுவிக்கப்பட்ட பகுதிகள் புரட்சிகர விழாக்கோலம் பூண்டிருக்கின்றன.

இந்த மண்ணில் புதிய வரலாற்றை வீரகாவியத்தைப் படைத்துச் சென்ற இம் மண்ணின் மைந்தர்களை நினைவுகூர மக்கள் தயாராக வேண்டும்.

இவர்களது போராட்ட வாழ்வு முனிவர்களது வாழ்வைப் போன்று பற்றற்று இருக்கவில்லை;

ஆசைகளும், பாசங்களும் அவர்களிடம் இருந்தன. கவலைகளையும், துன்பங்களையும் அவர்கள் சந்தித்தார்கள். ஆனால், தாங்கள் வகிக்கும் கூரலாற்றுப் பாத்திரத்தை உணர்ந்து சில மனித உணர்வுகளை மட்டுப்படுத்தினார்கள்; சில பற்றுகளைத் தியாகம் செய்தார்கள்.

ஆகவே, மாவீரர்கள் எமது மக்களுக்காக தங்களது உயிர்களை மட்டும் அர்ப்பணிக்கவில்லை, உணர்வுகளையும் தியாகம் செய்தார்கள்.

இவ்விதமாக ஒரு சுதந்திர நாட்டை உருவாக்கும் முயற்சியில் வீரமரணத்தைச் சந்தித்துக்கொண்டிருக்கும் மாவீரர்களை இன்றைய சந்ததி மட்டுமல்ல இனிவரும் சந்ததிகளும் நினைவுகூர்ந்து கௌரவிக்க வேண்டும். மாவீரர்களை நினைவுகூருவது என்பது வெறும் சம்பிரதாயமாக இருக்கக்கூடாது. இவர்களது தேசப் பற்றினை, அர்ப்பண உணர்வை ஒருமுறை மீண்டும் பார்ப்பதுடன், தமக்கென வாழாது மக்களுக்காக மடிந்த இம்மாவீரர்களது தியாகங்களை நாம் மதிக்கவும் வேண்டும்.

இன்று தொடங்கும் (21-11-1991) எதிர்வரும் 27 ஆம் திகதி வரும் தமிழீழத் தேசிய நாளில் மாவீரர் நாள் வரை நினைவு கூரல் தொடரும்.

26 ஆம் திகதி நள்ளிரவு 12 09 மணிக்கு நினைவொலி எழுப்புதலுடன் மாவீரர் நாள் உத்தியோகபூர்வமாக பறை சாற்றப்படும்;

மக்கள் அனைவரும் ஒரே நேரத்தில் மாவீரர்களை நினைவுகூர வேண்டும் என்பதே பேரொலி எழுப்புவதின் பிரதான நோக்கமாகும்.

அந்தப் பேரொலியுடன் மக்கள் எழுந்து நிற்பர். இரண்டு நிமிடங்கள் மாவீரர்களையும், அவர்களது தியாகங்களையும் மனதில் நினைவுகூர்ந்து ... (உ)

## கோபாலசாமியின் சகோதரர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டது!

சென்னை, நவ. 21

பாளையங்கோட்டையில் வைத்து கடந்த வாரம் கைது செய்யப்பட்டவரும், தி. மு. க. பிரமுகர் கோபாலசாமியின் சகோதரருமான வி. ரவிச்சந்திரன் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்று கருதப்படும் ஆறு பேருக்கு தனது வீட்டில் தஞ்சம் அளித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

## தமிழகத் தலைவர்களை தொண்டா சந்திக்கவில்லை

கடந்த வார இறுதியில் இந்தியா சென்ற அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தமிழகத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். ஆனால் அந்த தமிழக அரசியல் தலைவர்கள் எவரையும் அவரால் சந்திக்க முடியவில்லை.

தமிழகத்தில் பெய்த கடும் மழையே அதற்குக் காரணம் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது புதுடில்லியில் தங்கியிருக்கும் அமைச்சர் தொண்டமான் இரண்டொரு தினங்களில் கொழும்பு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## அமைதிப்படைக்கு ஏற்பட்ட இழப்பு: தவறான ராணுவத் தலைமையே காரணம்

### சர்தேஷ் பாண்டே விமர்சனம்

புதுடில்லி, நவ. 21

இலங்கையில் புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் இந்தியப் படைக்கு ஏற்பட்ட இழப்புக்கு இந்தியாவின் இராணுவத் தலைமையே காரணம்.

இவ்வாறு இலங்கையில் இந்திய அமைதிப்படையின் சிரேஷ்ட அதிகாரியாகக் கடமையாற்றிய சர்தேஷ் பாண்டே கடுமையாக விமர்சித்துள்ளார்.

பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனம் கடந்த ஞாயிறன்று இத் தகவலை வெளியிட்டது.

இலங்கையில் இந்திய அமைதிப்படையின் செயற்பாடு குறித்து இவர் எழுதியுள்ள நூல் ஒன்றிலேயே இந்தக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நூல் இன்னும் வெளியிடப்படவில்லை.

அப்போது இந்திய இராணுவத் தளபதியாக இருந்த கிருஷ்ணசாமி சுந்தர்ஜி இந்திய அமைதிப் படையைப் புலிகளுடன் அவசரப்பட்டு போராட்டத்தில் தள்ளி விட்டார் என்றும் —

இந்தியத் துருப்புகள் அப்போது தயாரற்ற நிலையில் இருந்தன என்றும் —

எதிரியின் திறமை தவறாக எடைபோடப்பட்டன என்றும் —

இராணுவ நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கிய அதிகாரிகளுக்கிடையில் தொடர்ச்சியான முரண்பாடுகள் நிலவின என்றும் சர்தேஷ் பாண்டே குறிப்பிட்டுள்ளார் என்று அந்தத் தகவல் மேலும் தெரிவிக்கின்றது. (த)

### கார்த்திகை தீபம்

யாழ்ப்பாணம், நவ. 21

கார்த்திகைத் தீபத் திருநாள் இன்றாகும். திருக்கார்த்திகைத் தீபம் இன்று வீடுகளிலும் ஆலயங்களிலும் ஏற்றப்படும். விஷ்ணு தீப நாள் நாளையாகும்.

இன்று வழமை போல் கார்த்திகை பௌர்ணமி கால விழா நல்லூர் மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் மாலை நடைபெறும். (அ)

### 2 தாக்குதல்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டது என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன!

ஆனால் பள்ளிக்குடா அருகே பூநகரி — சங்குப்பிட்டிப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் —

தாக்குதலில் ஒன்பது படையினர் உயிரிழந்தனர் என்றும் —

ஆறு படையினர் காயமடைந்தனர் என்றும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

"இராணுவத்தினரால் சூழப்பட்ட யாழ் குடாநாட்டுக்குள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் பெரும் எண்ணிக்கையில் இருக்கின்றனர் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருப்பது தற்போது சந்தேகத்துக்கு இடமாகிவிட்டது என்பதை இத்தாக்குதல்கள் எடுத்துக் காட்டுகின்றன." — என்று பி. பி. ஸி. வர்ணித்துள்ளது.

இராணுவம் — புலிகள் போரில் ஏற்பட்ட மந்த நிலை நீங்கி புதிய தாக்குதல்கள் ஆரம்பமாகி விட்டன என்பதையே புலிகளின் எதிர்த் தாக்குதல் 'தெரிவித்துள்ளதாக' வானொலி தெரிவித்தது. (உ-த-எ-3-5-15)

### சாயி ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், நவ. 21

திருநெல்வேலி சேர். பொன். இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமிதி மண்டபம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 66 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறது.

காலை முதல் மாலை வரை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 98

புதுடில்லி, நவ. 21

ஆந்திரப் பிரதேசத்தில் கடந்தவாரம் பெய்தமழையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 98 ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (த)

### செஞ்சிலுவை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புப் பிரதேசமாக அறிவித்தல் ஆகியவை குறித்து இந்தப் பேச்சின்போது ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்தால் முதலாவது வாகன அணி இம்மாத இறுதியில் காங்கேசன் செல்லும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மாகிரேட் பஸ்தியாம்பிள்ளை

கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 44, சோமசுந்தரம் ஒழுங்கையில் வசித்தவருமாகிய திருமதி மாகிரேட் பஸ்தியாம்பிள்ளை நேற்று முன்தினம் காலமானார்.

இவர் நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்ற குலசேப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளையின் [தம்பையா] அன்பு மனைவியும், திருமதி செல்வம் வேதநாயகம் [இளைப்பாறிய ஆசிரியை, புனித சாள்ஸ் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்], திருமதி ஸ்ரெல்லா நிக்கலஸ் [இளைப்பாறிய ஆசிரியை, புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை], செல்வி சிறிகிடா பஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திருமதி லிலிகச் முத்தம்மா ஆசீர்வாதம், திருமதி வோசப்பின் சவிரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், ம. வேதநாயகம் [இளைப்பாறிய லிகிதர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்], திரு. ஜவன் நிக்கலஸ் [ஆசிரியர், பண்டிவிரிச்சான் அ. த. க. பாடசாலை], ஆகியோரின் மாமியாரும், Dr. கிதேசியன் [அமெரிக்கா], எறிக் டறன் [லண்டன்], பிறயன் [லண்டன்], றோசன் [நோர்வே], கிதிசான் [மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்] ஆகியோரின் பேரனும், டாறியோ அன்ரனியின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்திற்கு நல்லடக்க ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின் புனித கொஞ்சேஞ்மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

44, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். திரு. ம. வேதநாயகம்

(18774)

## அ. ப. பாலசுப்பிரமணியம்

(சமூக சேவையாளர்)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், பின்னர் சுன்னாகத்தில் வசித்தவருமாகிய அ. ப. பாலசுப்பிரமணியம் 19 - 11 - 91 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் தனபாக்கியத்தின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரி, மோகனதாஸ், லிலசூரியதாஸ் (சுவிஸ்சர்லாந்து), கிருஷ்ணதாஸ், குமரதாஸ், தனபாலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (விக்கி இண்டஸ்ரீஸ், சுன்னாகம்), விசாலாட்சி ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை, நாகம்மா, கனகரத்தினம், தில்லையம்மா, தருமலிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நமசிவாயம், அம்பலவாணர், மனோன்மணி, இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20 - 11 - 91 புதன்கிழமை பி. ப. 4 மணிக்கு சுன்னாகம் ஸ்ரேசன் றோட் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்:

பா. மோகனதாஸ்.

சுன்னாகம் - கிழக்கு (18835)

## அம்பலவாணர் தங்கம்மா

அம்பலவாணர் தங்கம்மா 13 11-1991 அன்று காலமானார். இவர் புங்குடுதீவு குறிகாட்டுவான் முத்துவேலு தம்பதிகளின் மகளும், பொலிஸ் அம்பலவாணரின் அருமை மனைவியும், ஸ்ரீதரன், கமலபூசணி, கௌரிதேவி, ஸ்ரீமுருகன் (வசந்தன்), ஸ்ரீபார்த்திபன், ஸ்ரீ ஆதிமர்த்தனன், ஈஸ்வரபூசணி, ஸ்ரீபரணிதரன், ஸ்ரீபகீரதன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். இவரது ஈமக்கிரியைகள் புதுக்குடியிருப்பில் நடைபெற்றன.

தகவல்:

த. கண்ணன்

15/10, இராசதுரை வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (18777)

## சிவஸ்ரீ இரத்தினசாமிக் குருக்கள் ஐயாத்துரை ஐயர்

[சின்ன ஐயா]

[சதுமலை ஸ்ரீசிவன் கோவில் ஆதீனகர்த்தா]

சதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற இரத்தினசாமிக் குருக்கள், வாலாம்பிகையம்மாவின் மகனுமான ஐயாத்துரை ஐயர் சிவனடி சேர்ந்தார்.

அன்னாரின் சமக்கிரியைகள் 21-11-1991 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு சதுமலையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(18778) சகோதரர்கள், மைத்துனர்

# மாவீரர் அஞ்சலிக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 21

★ மாவீரர் தினத்தை முன்னிட்டு இன்று காலை 8 00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. விசேட உரைகளை அடுத்து கவியரங்கும், புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி ஆகியவை இடம்பெற உள்ளன.

★ யாழ். செங்கதிரில் இன்று காலை 8 மணிக்கு தேசியக்கொடி ஏற்றி வைக்கப்படுவதுடன் மாவீரர் வார நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

★ யாழ் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஊரிகாவற்றுறை ப. நோ. கூ. சங்கம் தனது கிளைக்கு அருகாமையில் இன்று காலை 8 00 மணிக்கு அஞ்சலி நிகழ்ச்சிகளை நடத்துகிறது. 27ஆம் திகதிவரை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவீரர் தின நிகழ்ச்சிகள் ஐந்து கோட்டங்களில் பெரும் அளவில் நடைபெற உள்ளன.

வலிமேற்குக் கோட்டத்துக்கான கூட்டம் இன்று சங்கானை இவப்பிரகாசம் வித்தியாலயத்தில் நடைபெறும்.

## வெளியீட்டு விழா

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் மாதாந்த வெளியீடான "ஊழியன்" பத்திரிகை வெளியீட்டு விழா இன்று காலை 11 மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறும்.

(அ-5)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இம்மையில்: 09-10-1961

மறுமைக்குள்: 28-11-1990

திதி: 21-11-1991



## கிருஷ்ணபிள்ளை ஸ்ரீதரன் (ஆமிஸ்ரீ)

(லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம்)

அன்பின் வடிவே! பாசத்தின் பிறப்பிடமே! அரிய எங்கள் பொக்கிஷமே! ஸ்ரீயே! நும் நினைவாலே சோர்ந்து நிலைகுலைந்தோம். நெஞ்சம் கலங்கி நெகிழ்கின்றோம். இப்பொழுது உங்கள் நினைவோடு எம் உயிர் கலந்து நிற்குதையா! ஓராண்டு என்ன எத்தனை ஆண்டு மறைந்தாலும் எம் மனமெல்லாம் உன் நினைவால் வாடுதையா.

உமது பிரிவால் வாடும்:

தாய், சகோதரர்கள், மனைவி, மகன், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

மயிலங்கூடல், இளவாலை. (4384)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 23 - 4 - 1940

மறைவு: 1 - 12 - 1990

திதி: 21-11-1991 பூரணை



## அமரர் வேலுப்பிள்ளை சிவகடாட்சம்

ஆண்டொன்று சென்றதையா நீ அமரனாகி
வேண்டியதனைத்தும் தந்து நீ புறந்திட்டாய்
சாண்டரிய கடவுள் பதம் நீ பெற்றிட்டாய்
ஈண்டிருக்கும் எம்மையும் நீ காத்திடாயோ!

நீள நினைக்கும்:

உருத்திராணி [மனைவி],
ரூபி, வசந்தினி, சிவநேசன்,
ரமணதாஸ் [மக்கள்],
உறவினர்கள்.

51, சிவன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (18845)

# இன்று நடைபெற உள்ள மாவீரர் வாரக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ 21

மாவீரர் வாரம் ஆரம்ப தினமான இன்று வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் கூட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்த தீவுப்பகுதி மக்களுக்காக யாழ். நகரிலும் இன்று கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகல கூட்டங்களும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் இக்கூட்டங்களில் உரைநிகழ்த்துவார்கள்.

கரவெட்டி வட்டவையில் துன்னாலை, கலிகைக் கந்தசாமி கோவிலிலும் —

பருத்தித்துறை வட்டவையில் கெருடாவில் அ. மி. த. க. பாடசாலையிலும் —

சாவகச்சேரி வட்டவையில் நாவற்குழி ம. வித்தியாலயத்திலும் —

சாவகச்சேரி வட்டவையில் நுணாவில் சரஸ்வதி வித்தியாலயத்திலும் —

கொடிகாமம் வட்டவையில் கச்சாய் அரசினர் வித்தியாலயத்திலும் —

இடம்பெயர்ந்த தீவுப்பகுதி மக்களுக்காக யாழ். ரயில் நிலைய முகாமிலும் —

உடுவில் வட்டவையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும் —

நல்லூர் வட்டவையில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திலும் —

தெல்லிப்பளை வட்டவையில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோவிலடியிலும் கூட்டங்கள் நடைபெறும்.

மாவீரர்வாரக் கூட்டங்கள் 26ஆம் திகதிவரை பல்வேறு வட்டவைகளிலும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

வடமராட்சி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர் சிறுநீரக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கே விண்ணப்பங்களை அனுப்பலாம். கொழும்பு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பவேண்டிய கட்டாயமில்லை.

இதேவேளை விண்ணப்பம் அனுப்புவதற்கான கடைசி நாள் 25ஆம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்புவதற்கான நிபந்தனைகள், மாதிரி விண்ணப்பப் படிவம் ஆகியன நாளைய உதயனில் வெளிவரும். (அ)

# மரண அறிவித்தல்கள்

## சிவகெங்கை அம்மா

இலட்சுமணன் தோட்டம், தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரக் குருக்களின் மனைவி சிவகெங்கை அம்மா 20-11-1991 நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தம்பையா ஐயர், சபாரத்தின ஐயர், தங்கம்மா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இலட்சுமணன் தோட்டத்தில் 21-11-1991 காலை 11 மணியளவில் நடைபெறும்.

தகவல்:

தி. சோமஸ்கந்தராசாக் குருக்கள்

இலட்சுமணன் தோட்டம், தும்பளை, பருத்தித்துறை. (18779)

## திரு. இராமநாதர் சொக்கலிங்கம்

சரவணை கிழக்கைச் சேர்ந்த திரு. இராமநாதர் சொக்கலிங்கம் அவர்கள் 20 11-1991 புதன் காலை சிவபதமெய்தினார்.

அன்னார் சரம்பனைச் சேர்ந்த காலஞ்சென்ற சொர்ணம்மாவின் அன்புக் கணவரும், திரு. சிவஞானசேகரம் (லண்டன்), திருமதி ஆனந்தக்குமாரசுவாமி (சங்கீத ஆசிரியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம்), திருமதி தற்பராமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி நகேஸ்வரி சிவஞானசேகரம் (லண்டன்), திரு. க. ஆனந்தக்குமாரசுவாமி, திரு வி. தற்பராமூர்த்தி (A/C மூர்த்தி) ஆகியோரின் மாமனாரும், அன்புச்செழியன் (பிரசன்ன), இளஞ்செழியன், உமாதேவி, ரோகினி, அருட்செழியன், அருள்விழி, செந்தூரன், சிவகரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-11-91 வியாழன்) பகல் 11 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:

வி. தற்பராமூர்த்தி (A/C)

அம்பலவாணர் கந்தசுவாமி கோவிலடி, தாவடி தெற்கு, கொக்குவில். (18776)

## ஏ. வி. ஜெயராஜா

ஓய்வு பெற்ற லிகிதர் ஏ. வி. ஜெயராஜா காலமானார்.

இவர் கனகமணியின் அன்புக் கணவரும், ஜெனாலந்தன் (இத்தாலி), மஞ்சுளா, சகோதரி சியாமளா, பிரேமளா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையும், தேவரத்தினம் (இத்தாலி), ஜோசப் (கிராம சேவையாளர்-கைதடி), சகோதரர் தேவசகாயம் (இரட்சண்ய சேனை இல்லம்-கைதடி), ரவிராஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று மாலை 4 மணிக்கு கோப்பாய் கடக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:

தேவசகாயம்

(18780)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 292/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 - 11 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org